NEW CAMBRIDGE TUTORIAL INSTITUTES

THIRUNELVELY JUNCTION

5-8-79இல் ஆரம்பமாகின்றன

1. SHORT HAND and TYPING
2. பரதநாட்டியம், வயலின், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல்
3. சங்கீதம், திருமுறை [தேவாரம்] பண்பயிற்சி நெறி
4. G. C. E. (A/L) வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம்

விபரங்களுக்கு:-

V. M. PAKKIANATHAN.



பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆடி 18 றம்ழான் 9 இதழ் 172

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 3-8-79



இறக்குமதி செய்யப்பட்ட

° பலவித பரிசுப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், தையல் வேலைகளுக்குரிய சகல பொருட்கள்.

மற்றும்

° யப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல தரங்களிலுமுள்ள காதுகேட்கும் கருவிகள் யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

கிருபா கிவ்ற் கவுஸ்

KIRUBA GIFT HOUSE

சோதிடவிலாஸ் கட்டிடம்

46, பெரியகடை - யாழ்ப்பாணம்

தொலைபேசி: 8083



RECEIVED 1979-8-3 PERIODICALS DIVISION LIBRARY


பிரதி ஞாயிறு தோறும்

# வாகனப் போக்குவரத்துத் தடை 12ந் திகதி முதல் அமுல்

## முனீஸ்வரம், பெரியமடு புனித பகுதிகளாகும்

[கொழும்பு]

சிலாபம் முனீஸ்வர இந்து ஆலயப் பகுதியும், மன்னார் மடுமாதா கோவில் பகுதியும் புனித பகுதிகளாகப் பிரகடனம் செய்யப்படவிருக்கின்றன.

பிரதம மந்திரி திரு ஆர் பிரேமதாசாவின் தீர்மானத்திற்கமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக உள்ளூராட்சி அமைச்சு உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

சகல சமயங்களுக்கும் பாதுகாப்பளிப்பது என்ற அரசின் கொள்கைக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்விரு ஆலயப் பிரதேசங்களைப் புனிதபகுதியாகப் பிரகடனம் செய்வதற்கான ஒழுங்குகளை எடுப்பதற்காக இவ்விரு ஆலயங்கள் பற்றிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் கலாச்சார அமைச்சரிடம் கோரியுள்ளார். [ச-அ]

## பங்கீட்டுக்கு மேலதிக இலவச அரிசி

[யாழ்ப்பாணம்]

பங்கீட்டுப் புத்தகங்கள் வைத்திருப்போர் தமக்கு மேலதிகமாக இவ்வாரம் முதல் வழங்கப்பட்டுள்ள இலவச ஒரு ருத்தல் அரிசியை 254 ஈ என்னும் புள்ளியைக் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தகவலை யாழ் மாவட்ட உதவி உணவு ஆணையாளர் திரு ஏ எஸ் வி ஆனந்தன் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்திலுள்ள பல அங்கீகாரம்பெற்ற தனியார் கடைகளும் சில ப நோ கூ சங்க முகாமையாளர்களும் அப்பாவி மக்களை ஏமாற்றி ஒரு ருத்தல் இலவச அரிசியை வழங்குவதாக பாவனையாளர்கள் செய்துகொண்ட புகாரைத் தொடர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலிருக்கும் 261 இ என்னும் புள்ளிக்கு ஒரு ருத்தல் இலவச

[6 ம் பக்கம் பார்க்க]

## அலுவலக வேலை நேரத்தில் 13ந் திகதி முதல் மாற்றம்

(கொழும்பு)

அரசாங்க- கூட்டுத்தாபன- தனியார் துறை ஊழியர்களின் வேலை நேரம் தொடர்பான புதிய ஏற்பாடுகள் எதிர்வரும் 13ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வருகின்றன.

ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 8 மணியிலிருந்து 12 மணிவரை மோட்டார் வாகனங்கள் வீதிகளில் ஓடுவதற்கு தடை விதிக்கும் ஏற்பாடுகள் எதிர்வரும் 12ம் திகதி ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் அமுலுக்கு வரும்.

அரசாங்க - கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்களின் வேலை ஆரம்பமாகும் நேரம் தொடர்பான புதிய திட்டம் 13ம் திகதி தொடக்கம் அமுல் செய்யப்படும்.

அரசாங்க துறைக் காரியாலயங்கள் காலை 8-45 மணிக்கு திறந்து மாலை 5 மணிக்குப் பூட்டப்படும்.

தனியார் துறைக் காரியாலயங்கள் காலை 8 மணி முதல் மாலை 4-30 மணி வரை நடைபெறும்.

வர்த்தக நிலையங்கள், கடைகள் காலை 9-30 மணிக்கு திறந்து மாலை 6 மணிக்கு மூடப்

[6 ம் பக்கம் பார்க்க]

## மாவட்ட அமைச்சர் வந்தார்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட அமைச்சரும் தம்பதெனியா எம். பியுமான திரு. உக்குபண்டா விஜயக்கோன் நேற்றுகாலை ரயில்மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அமைச்சருடன் அவரின் அந்தரங்கச் செயலாளர் திரு பியசிறீ வெஸ்டவோவும் தம்பதெனியா ஐக்கியதேசியக் கட்சி ஆதரவாளர்கள் பலரும் ரயிலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு யோகேந்திரா துரைசுவாமியும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களும் இவர்களை ரயில் நிலையத்தில் கூடிநின்று மாலை சூட்டி வரவேற்றனர்.

காலை யாழ் செயலகத்திற்குச் சென்ற மாவட்ட அமைச்சரை யாழ் செயலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் மாலை அணிவித்து வரவேற்றனர்.

செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ் மாவட்ட அபிவிருத்தி பற்றிய மாநாடு ஒன்றும் நடைபெற்றது. [கெ]

## யாழ். நுண்ணலைத் தொடர்புநிலையம் கட்டிட வேலைகளைத் துரிதப்படுத்த உத்தரவு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் நுண்ணலைத் தொடர்பு நிலையத்தை அமைக்கும் வேலைகளைத் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜயவர்த்தன சம்பந்தப்பட்ட கட்டிடத் திணைக்களத்தையும், தந்தி, தொலைபேசி தொடர்பு பகுதியினரையும் பணித்துள்ளார்.

கடந்த ஒன்பது மாதங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்தில் இதற்கான காணியும் தெரிவு செய்யப்பட்டு, ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. கட்டிட வேலைகளைப் பொறுப்பேற்ற கட்டிடத் திணைக்களம், இதுவரை இந்நிலையத்துக்கான வரை படங்களைத் தயாரிக்காமையால் கட்டிட வேலைகள் நடைபெற

[6 ம் பக்கம் பார்க்க]


மக்கினென் டிரவல் சேவிஸ் (இலங்கை) லிமிட்டெட்

Mackinnon Travel Service (Ceylon) Ltd

தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில் 8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.

இங்கு
- உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
- சுற்றுலாக்கள்
- பாஸ்போட்
- விசா

இப்படி எல்லாவசதிகளையும் கொழும்புக்கு செல்லாமலே ஒழுங்கு செய்துகொள்ளலாம்.

உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.

மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்,

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!


## ஜனாதிபதி கமிஷனில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கலந்துகொள்ளாது

### அரசியல் உயர் குழு ஏகமனதாக முடிவு

[கொழும்பு]

அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கும், தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பாகவும் ஆராயும்பொருட்டு நியமிக்கப்படவுள்ள ஜனாதிபதி கமிஷனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கலந்துகொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினமிரவு டார்லி வீதியிலுள்ள கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற அரசியல் உயர் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

நீண்ட நேரமாக நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரஸ்தாப கமிஷனில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி கட்சித் தலைவிக்கு அனுப்பிய கடிதமும் பரிசீலிக்கப்பட்ட பின்னரே இம்முடிவு எடுக்கப்பட்டதுடன் இதுபற்றி ஜனாதிபதிக்கு அறிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக சுதந்திரக் கட்சியின் செயலாளர் திரு. விக்கிரமநாயக்கா பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில், முன்னாள் பிரதம நீதியரசர் திரு. விக்ரர் தென்னக்கோன் தலைமையில் நடைபெறவுள்ள ஜனாதிபதி கமிஷனில் எமது கட்சி கலந்துகொள்வதில்லை என்று அரசியல் உயர் குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. சிறுபான்மையினர் பிரச்னைகள் தொடர்பாக சுதந்திரக் கட்சியின் நிலைபற்றி மிக விரைவில் அறிக்கையொன்று வெளியிடப்படும் என்று தெரிவித்துள்ளார். [ஐ-கு]

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

யாழ்ப்பாண நகரில், பிறப்புச் சாட்சிப் பத்திரம் நற்சாட்சி பெறுபேறுகள் பத்திரம் அடங்கிய தபாலுறை தவறிவிட்டது கண்டெடுத்தவர் ஒப்படைக்கவும் தனபாலசிங்கம், முருகர் வீதி, மீசாலை தெற்கு. 3221

### CLASSES

Private Tuition Classes for the following courses of studies commence on 6-8 79 G C E 'O' leve s—Deo 1979 —Mathematics GCE 'A' levels (London)-June 1980-Further Mathematics and Mathematics GCE 'A' levels-April 1980 - Pure Mathematics and Applied Mathematics. Homes also visited for a batch of three or more students Contact A. Gnanasambandan, 38 (67) College Road, Neeraviady, Jaffna. 3202

### தேவை

கடைச் சிப்பந்திகள் தேவை' நல்லொழுக்கமுள்ளவர்கள் வேலையில் ஊக்கமுள்ளவர்கள்' நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும், யாழ் நகருக்கு சமீபத்தில் வசிப்பவர்கள் விரும்பப்படுவர். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 191[53] காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 3219

### விற்பனைக்

குடப்பவுடர் மொத்தமாக விற்பனைக்கு உண்டு. றுத்தல் ரூபா 25/-. க. சச்சிதானந்தம், 13/1, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 3218

யாழ் நகரில் சப்பல் வீதியில் (1ம் குறுக்குத்தெருவுக்கு அருகாமையில்) 2 கடைகள் விற்பனைக்குண்டு. செ. கருணாநிதி, 8, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம். 3211

புதிய ஹம்பர் (இந்தியா) 22'' சைக்கிள் 695/- முற்பணம் செலுத்தி ஓடர்செய்யவும். முதலில் வருபவர்களுக்கு முதலில் வழங்கப்படும். கூரைநெளிவு தகரங்களுக்கும் மேசனறி சீமெந்துக்கும் ஓடர் ஏற்றுக்கொள்ளப்படும். ஜெயன் கட்டிட ஒப்பந்தக்காரர் உரும்பராய் சந்தி. 3210

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீன முறையில் பயிற்சிகள் வெல்டிங் (Electric Arc & GAS) இலெக்ரிக் வயறிங் ரேடியோ (Transistor Building Technology P M G Certificate முதலிய பயிற்சிகளுக்கு National Institutes, 57 பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 3173

### வாடகைக்கு

பிறஸ், துப்புக்கட்டு ஆகியவற்றை கொண்டு சென்று விற்பனை செய்யும் வண்டிலும் பொருட்களும் வாடகைக்குக் கொடுக்கப்படும் எம். ஆர். டி. சில்வா, 121, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம் 3204

## தங்கப்பதக்கம் பெறுகின்றார்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட வீணை இசைப்போட்டியில் சுண்டிக்குளி மகளிர்கல்லூரி மாணவியான செல்வி சிவானுஜா சோமசேகரசுந்தரம் கீழ்ப்பிரிவில் முதலாவது இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கம் பெறுகின்றார்.

இவர் திருமதி கமலா கிருஷ்ணமூர்த்தியின் மாணவியாவார். (க-அ)

## பரலோகமாதா உற்சவம்

(உடுப்பிட்டி)

சரவெட்டி பரலோக மாதா ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 6ம் திகதி மாலை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகின்றது. நவநாட் திருவிழாவான இவ்வுற்சவம் 15ம் திகதி மாலை நடைபெறும் சுற்றுப்பிரகார ஆராதனையுடன் நிறைவுபெறும்

14ம் திகதி இரவும், 15ம் திகதி காலையும் விசேட ஆராதனைகள் இடம்பெறும் (அ)

செ. மகேசன்
சட்டத்தரணி,
யாழ்ப்பாணம்.

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற ஜேம்ஸ் நோர்பற்ஜோசப்கதிற்றல் தெரு, யாழ்ப்பாணம் என்பவரினது மரண சாதன விடயத்தில் மரணமெய்தியவரி மரணசாதன நியாதிக்கம் இல: 3451

ஜேம்ஸ் நோர்பற் ஜோசப் கைப்பெண் பீஸ் மேரி பணிக்கா ராகினி, 13, கதிற்றல் தெரு, யாழ்ப்பாணம்.

மனுதாரி

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1979-ம் ஆண்டு வைகாசி மாதம் 2-ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

1979-ம் ஆண்டு வைகாசி மாதம் 2-ம் நாளன்று திகதியிடப்பட்டது.

3191

## சாவகச்சேரி நகரசபை கேள்விப்பத்திர விளம்பரம்

சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் மகிளங்கேணியில் மூன்று இரட்டை வீடுகள் அமைப்பதற்கான கேள்விகள் இந் நகரசபையில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

கேள்விகள் கீழ்க்குறிப்பிடப்படும் திகதிக்கும் நேரத்திற்கும் பிந்தாமல், அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடலாம். கேள்வியுறையின் இடதுபக்க மேல்மூலையில் "மகிளங்கேணியில் மூன்று இரட்டை வீடுகள் அமைப்பதற்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடல்வேண்டும். கேள்விப்பத்திரத்தின் பிரதியொன்றும் குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பிந்தாமல் அரக்கு முத்திரையிடப்பட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கும் பதிவுத்தபாலில் அனுப்பப்படல்வேண்டும்.

கேள்விப்பத்திரங்களை 16-8-79ம் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் ரூபா 10/- செலுத்தி இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி வைப்புப்பணமாக ரூபா 100/- செலுத்தப்படல் வேண்டும்.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 17-08-79 காலை 10-00 மணி வரையுமாகும்.

மேலும் தேவையான விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். கே. திரவியநாயகம்
தலைவர்
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
01-08-79. 3216

## யாழ்ப்பாணம் மாநகரசபை அறிவித்தல்

தற்காலிக தமிழ் சுருக்கெழுத்தாளர் பதவி

மேற்கூறிய பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆண்கள் விரும்பத்தக்கது.

தகமையுடையோர் 10-8-79ம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். தெரிவுசெய்யப்படுவர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 10-75 வேதனமாக வழங்கப்படும்.

இலைப்பசறிய உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

தகைமையில்லாதவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

க. சிவஞானம்
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
31-7-79. 3217

## சீமெந்து விநியோகம்

சீமெந்து பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் தபால் மூலம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் கிடைத்து (04) நான்கு வாரங்களுக்குள் பாவனையாளர்களுக்கு சீமெந்து விநியோகிக்கும் திகதி அறிவிக்கப்படும்.

தொழிற்சாலை
முகாமையாளர்.

3194

## இன்றைய பலன்

ஆடிமாதம் 18-ம் திகதி
(வெள்ளிக்கிழமை)
(3 8-1979)

**மேடம்:** சீறிவரும் கோபம் பெரிய சோதனைகளை ஏற்படுத்தும், எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும், சிலருக்கு எதிர்பாராத விதமாக உடல் நலன் பாதிக்கப்படும், பொறுமைவேண்டும்.

**இடபம்:** இல்லத்தில் இனிமை மலரும், உறவினர்கள் கூடுவர், உல்லாசமான பொழுதுபோக்கும் உண்டு.

**மிதுனம்:** முன்னேற்றத்தில் தடை ஏற்படும், சிறு பிணி வாட்டும், ஆதரவு தருபவர்களை பகைத்துக்கொள்ள வேண்டாம்.

**கடகம்:** புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள், அரசியல் வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும், எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள், பெரியோர் ஆசியும் அவசியம் கிடைக்கும்.

**சிங்கம்:** தொழில்துறையில் புதிய வெற்றி கிடைக்கும், மேலதிகாரிகளின் பாராட்டுக்கு இலக்காகுவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடக்கடந்த பிரயாணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம், சிறப்பான தினம்.

**கன்னி:** எதிர்பாராத பொருள்வரவும் பொதுசன மதிப்பும் இன்று கிடைக்கலாம், நன்மையான காரியங்களில் பணச் செலவு ஏற்படும், டாக்டர்கள் தொழிலில் பிரகாசிக்க முடியும்.

**துலாம்:** நடையில் தயக்கம் ஏற்படும், உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகி விடும், சகோதர

(6ம் பக்கம் பார்க்க)

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் 6-ம் தரப் பிரவேசப் பரீட்சை -- 1980

மேற்படி பரீட்சை 10-11-79-ந் திகதி சனிக்கிழமை வடமாநில கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படும். விண்ணப்பங்கள் பின்வரும் பாடசாலை அதிபர்களினால் 1979-09-30-ந் திகதி வரை ஏற்கப்படும். மேலதிக விபரங்களுக்கு குறித்த பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | யாழ்ப்பாணம் | — | யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி |
| 2. | ,, | — | யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி |
| 3. | ,, | — | யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி |
| 4. | ,, | — | வேம்படி மகளிர் கல்லூரி |
| 5. | ,, | — | திருக்குடும்ப கன்னியர் மடம் வித்தியாலயம் |
| 6. | தெல்லிப்பழை | — | மகாஜனக் கல்லூரி |
| 7. | வேலணை | — | சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய ம. வி. |
| 8. | பருத்தித்துறை | — | ஹாட்லிக் கல்லூரி |
| 9. | ,, | — | மெதடிஸ்த பெண்கள் உயர்கல்லூரி, பருத்தித்துறை |
| 10. | நெல்லியடி | — | நெல்லியடி ம. ம. வி. |

தி. மாணிக்கவாசகர்,
வடமாநில கல்வி அதிபதி.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1979-07-31.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

அதிபர்

யா/............................................

.......................................

#### யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில்

#### 6-ம் தரப் பிரவேசப் பரீட்சை — 1980

1. மாணவர் பெயர்:-
2. பால்:-
3. பிறந்த திகதி:-
4. தற்போது படிக்கும் வகுப்பு:-
5. தற்போது படிக்கும் பாடசாலையின் பெயரும் முகவரியும்:
6. சாதியம் ;-
7. சமயம்:-
8. பெற்றோர் / பாதுகாவலர் பெயர்:
9. முகவரி (நிரந்தரம்):-
10. பிரவேசம் விரும்பும் பாடசாலைகள்:- முன்னுரிமை வரிசைப்படி (விண்ணப்பம் அனுப்பும் பாடசாலை தவிர்ந்த) 1 2 3

மேலே தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையென உறுதிப்படுத்துகின்றேன்.

மாணவர் கையொப்பம் பெற்றோர் / பாதுகாவலர் கையொப்பம்

#### மாணவர் தற்பொழுது கல்வி கற்கும் பாடசாலை அதிபரின் உறுதியுரை

மேற்படி மாணவர் / மாணவி தற்பொழுது 5-ம் தரத்தில் படிக்கின்றார் எனவும்..................ல் பிறந்தவர் என்பது பாடசாலையிலிருந்த பிறப்புச் சாட்சிப் பத்திரப்படி சரியெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

பாடசாலையின் பெயர் அதிபரின் கையொப்பம்

திகதி

3215

## Vacancies in Glass Factory

கண்ணாடித் தொழிற்சாலையில் அனுபவமுள்ள பவுளர் (Bubbiers) ஹெல்ப்பர் (Helpers) புளோவர் (Blowers) போன்றவர்களுக்கு சில வெற்றிடங்கள் இருக்கின்றன. அத்துடன் வேலைபழகுபவர்களும் (Trainees) எடுக்கப்படுவார்கள், உடன்நேரில் வரவும் தகுந்த சம்பளம் வழங்கப்படும்

சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி 3196

1-வது கட்டத்தில் யாழ்.மாவட்டத்திலிருந்து

# 199 பேருக்கு வேலைவாய்ப்பு; யோகேந்திரா குழு சிபார்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வேலைகளுக்கான விண்ணப்பிப்பவர்களைத் தெரிவு செய்து சிபார்சு செய்வதற்கு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட, யாழ் மாவட்டச் செயலாளரும், பாதுகாப்பு ஆலோசகருமான திரு யோகேந்திரா துரைசுவாமியைத் தலைவராகக் கொண்ட குழு, முதற்கட்டமாக இம்மாவட்டத்திலிருந்து வேலை கோரி விண்ணப்பித்தவர்களில் தகுதியான 199 பேரை சிபார்சு செய்துள்ளது.

பல்வேறு திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காகச் சிபார்சு செய்யப்பட்ட இந்த 199 பேரும் அந்தந்தத் திணைக்கள், கூட்டுத்தாபனங்களினால் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

அடுத்தபடியாக பல்வேறு திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் உள்ள இன்னும்பல வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை இக்குழு மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## துதிபாடத் துணைசெய்

ஞானசாதனையே வென்ற
நல்விரதத்தை யேற்ற
தீனராம் எமது கன்மம்
தொலைந்துமே போக வேண்டித்
தானமோ அஃது இன்றித்
தவத்தையோ செய்யா தின்று
ஆனகோபுரத்து வாயில்
அண்டினோம் நல்லைக்கந்தா.

மனமது மகிழ்ச்சி கொள்ள
மாகிளைத் தூய்மை ஓங்கச்
சினமறப் பாவம் நீங்கச்
செய்தொழில் சித்தியெய்தக்
கன சுகம் அற்றதேகம்
கவலை சேர் நோய்களற்றுத்
தினமெலாந் துதிகள் பாடத்
துணையதாய் நிற்க வேண்டும்.

— எழினி சீ. சிவநாதபிள்ளை

## சைவபரிபாலன சபையின் சமயபாடப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்படும் சமயபாடப்பரீட்சை விண்ணப்ப இறுதிநாள் பின்போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 4ம் திகதி நடைபெறவிருந்த சமயபாடம் பரீட்சைக்கான விண்ணப்ப இறுதிநாளைப் பல பாடசாலைகளின் வேண்டுகோளின்படி அடுத்த மாதம் 15ம் திகதி வரை பின் போட்டுள்ளதாக பரீட்சைச் செயலாளர் திரு. வ. கந்தசாமி தெரிவித்துள்ளார். (கா-அ)

## பெருங்குளம் உற்சவம்

(வேலணை)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் கடந்த 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

8வது திருவிழாவன்று இரவு திக்குவிஜய வைபவமும் 9ம் திருவிழா இரவு பெரிய சப்பரமும் 10-ம் நாளான 7ம் திகதி தேர்த் திருவிழாவும் மாலை தீர்த்தமும் நடைபெறும். மறுநாள் 8ம் திகதி பூங்காவனத்திருவிழாவுடன் உற்சவமும் முடிவடையும்.

கோவிலுக்கு வரும் யாத்திரிகர்களின் வசதி கருதி இ போ சபையினர் கோவிலடி வரை பஸ்சேவைகளையும் நடாத்திவருகின்றனர். (அ)

"கும்"மின் ஐக்கிய இலங்கையை

## மாற்றுக்கட்சியினரும் இன்று உணருகின்றனர்"

(யாழ்ப்பாணம்)

"கடந்தஇருபத்தைந்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஐக்கிய இலங்கையே தமிழ்மக்களுக்கு விமோசனம் அளிக்கும் என அமரர் குமாரசாமி வற்புறுத்திவந்தார். இதனை மாற்றுக்கட்சியினரும் இன்றுஉணருகின்றார்கள். இது அவரின் தீர்க்க தரிசனத்தை எடுத்துக்காட்டுகின்றது"

சாவகச்சேரி சரஸ்வதி பூங்காவில் காங்கிரஸ் இளைஞர் தலைவர் க. கனகரத்தினம் சாவகச்சேரி முன்னாள் எம். பி அமரர் குமாரசாமியின் ஜெயந்தி விழாவின்போது தலைமை உரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் அவர் செய்தசேவைகள் பொன்எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவை என்று ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் கூறினார்.

அவரை கௌரவிக்குமுகமாக அவரது கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் வாலிபர்களில் இருபத்தைந்து பேருக்காவது உத்தியோக வாய்ப்பளிக்குமாறு அரசாங்கத்தை கோருவது என்ற தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அன்னாரது சேவைகள் பற்றி சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. ஏ. ஆறுமுகம், திரு. எஸ். குமாரசாமி, இளைப்பாறிய ஆசிரியர் எஸ். இன்னத்தம்பி உட்பட பலர் உரையாற்றினர். சாவகச்சேரி தமிழ்காங்கிரஸ் இளைஞர் செயலாளர் திரு கே அரசரத்தினம் நன்றி கூறினார். (க)

யாழ் மாவட்டத்தில்

## சீமெந்துக்குப் புதிய சட்ட நிர்ணய விலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் சீமெந்துக்கு சட்ட நிர்ணய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பிரிவுகளுக்கும் வெவ்வேறு விலைகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளதுடன் அதனை மீறிவிற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக விலைக்கட்டுப்பாட்டுப்பிரிவு வழக்குத்தொடரவும் சட்டமூல ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் சீமெந்தில் வர்த்தகர்கள் அதிகலாபம் பெறுவதையும், பதுக்கலையும் முறியடிப்பதற்காக யாழ். மாவட்ட விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கூட்டப்பட்ட மாநாட்டிலேயே மேற்கண்டவாறு ஏற்பாடு செய்யப்பட்டது.

நேற்றுக்காலை யாழ்ப்பாண செயலக மண்டபத்தில் கூட்டப்பட்ட இம் மகாநாட்டில் யாழ் மாவட்ட பல நோக்கு சங்கப் பிரதிநிதிகளும் தனியார் வர்த்தக நிலையப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். மாநாட்டிற்கு யாழ் மாவட்ட விலைக்கட்டுப்பாட்டுப்பிரிவு உதவி ஆணையாளர் திரு. எஸ். வேல்முருகு தலைமை தாங்கினார்.

மாநாட்டில், விற்பனைக்கிருக்கும் சீமெந்துப் பக்கெட்டுகளில் தெளிவாக விலைகளைப் பொறிப்பதற்கும், பாவனையாளர் தேவையெனக் கேட்கும் போது, அச்சிட்ட ரசீதுகளை வழங்குவதற்கும், வியாபாரிகள் இணங்கியுள்ளனர்.

பல. நோ கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள புதிய விலைகள் வருமாறு:

தெல்லிப்பழை, அளவெட்டி, சுன்னாகம் ஆகிய பிரதேசங்கள் போட்லண்ட் ரூ. 31-25, மேசனறி ரூ. 20-00.

பண்டத்தரிப்பு, அச்சுவேலி, மானிப்பாய், சங்கானை, நெல்வேலி, நீர்வேலி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்கள் போட்லண்ட் ரூபா 31-50, மேசனறி ரூ. 20-25.

உடுப்பிட்டி, கைதடி, நெல்லியடி போட்லண்ட் ரூ. 31-75, மேசனறி ரூபா 20-50.

புலோலி-காரைநகர், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, வேலணை ஆகிய பிரதேசங்கள்: போட்லண்ட் ரூ. 32-00, மேசனறி ரூ. 20-75

கொடிகாமம் போட்லண்ட் ரூபா 32-25, மேசனறி ரூபா 21 00.

புங்குடுதீவு போட்லண்ட் ரூபா 32'50, மேசனறி ரூபா 21-25.

பளை போட்லண்ட் ரூபா 32.75, மேசனறி ரூபா 21-50.

பரந்தன், கிளிநொச்சி போட்லண்ட் ரூபா 33-50, மேசனறி ரூபா 22-25.

பூனகரி: போட்லண்ட் ரூபா 34-00, மேசனறி ரூபா 22-75.

இவ்விலைகள் விரைவில் வர்த்தமானியில் வெளிவரும். (கே-கு)

வவனியாவுடனான

## இணைப்பு இடைநிறுத்தம்

(கொழும்பு)

வவனியா மாவட்டத்துடன் புதிய மூன்று உதவிஅரசாங்க அதிபர் பிரிவுகளை இணைக்கும் முயற்சியை தற்காலிகமாக நிறுத்திவைக்குமாறு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வவனியா அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழர் விடுதலைக்கூட்டணியினர் ஜனாதிபதியுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் போது இரண்டு மாவட்டங்களாகப் பிரிப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருந்த கருத்துக்கமையவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. (ம)

## கிறித்தவ ஐக்கிய கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கிறித்தவ ஐக்கிய எழுப்புதற் கூட்டங்கள் நேற்று யாழ். திம்மர் மண்டபத்தில் ஆரம்பமாகி இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறுகிறது.

ஐயர்லாந்து மெதடிஸ்த திருச்சபை முன்னாள் தலைவர் திரு. ஜோர்ஜ் ஈ. குட், இலங்கை மெதடிஸ்த திருச்சபை நற்செய்திப் பணிப்பாளர் திரு எஸ். டி. தங்கத்துரை ஆகியோர் உரையாற்றுவார்கள்.

தினமும் காலை திருமறைப் படிப்பும், மாலை பாடல்கள், நற்செய்திக் கூட்டம் என்பன நடைபெறும். (கு)

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் பொலிஸ் நிலையத்தில் சிறு குற்றத்தடுப்புப் பகுதிப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு எஸ். திருச்சிற்றம்பலம் பொலிஸ் இன்ஸ்பெக்டராகப் பதவி உயர்வுபெற்றுள்ளார்

களுத்துறைப் பொலிஸ் பயிற்சிக்கல்லூரியில் இரண்டு மாதப் பயிற்சிபெறும் பொருட்டுச் சென்றுள்ள இவரதுஇடத்திற்கு யாழ். பொலிஸ் நிலைய உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு முத்துபண்டா நியமிக்கப்பட்டுள்ளார். (சோ)

## மக்கள் கருத்து

### உதவி அரசாங்க அதிபருக்கு சபாஷ்

அல்லைப்பிட்டி சமீபத்தில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை ஈர்த்த ஒருஇடம். அதிலும் கற்பகதரு வெனும் பனைவளம் பெருகிய இடம், இன்னும் சோலைப் போலும் கட்டடங்களுக்குரிய வெண்மணலையும் நிறையக் காணலாம் அவ்வூரிலே.

கடல்நீர் ஊருக்குள் புகாவண்ணம் அணைபோட்டு நிற்கும் அவ்வெண்மணல் மண் ஏற்றுவோர் ஆழத் தோண்டி எடுப்பதினால் கடல் அரிப்பு அபாயம் ஏற்படுமோ என அவ்வூர் நலன்விரும்பிகள் அஞ்சினார்கள்.

அதோடு மணலை அள்ளுவதன் மூலம் ஏராளமான பனைமரங்கள் அழிந்துகொண்டிருக்கின்றன (30-7-79) "ஈழநாடு" பத்திரிகையில் அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய இடங்களில் மணல்ஏற்றுமதி தீவுப்பகுதி அரசாங்க அதிபரினால் தடை செய்யப்பட்டுள்ளது என்ற செய்தி அவ்வூர் நலன் விரும்பிகளுக்குத் தேனாய் இனித்தது.

அரசாங்க அதிபரின் மேற்படி நடவடிக்கையால் கடல் அரிப்பு அபாயம், பனைமரங்களின் அழிவு, நன்னீர் உப்புநீராகமாறுதல், மழைகாலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படுதல் ஆகிய பலவகைத் தீமைகள் தடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே அரசாங்க அதிபரை நாம்வாழ்த்துவோம்.

ச. பாலன்சேவியர்,
3ம் வட்டாரம்
அல்லைப்பிட்டி.

## வல்வை சிதம்பரா சாரணர் விழா

(உடுப்பிட்டி)

வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரியின் சாரணர் விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. கோ. செல்வவிநாயகம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக இலங்கைச் சாரணர்சங்க உபபோஷகரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு அ அமிர்தலிங்கம் கலந்துகொள்கிறார். (அ)

## கொடிகாமத்தில் யு. என். பி. கிளை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி கிளைகள் அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கிறது.

கொடிகாமத்தில் இம்மாதம் 4ம் தேதி ஐக்கிய தேசியக் கட்சி கிளை ஒன்று அமைக்கப்படவிருக்கிறது இதைத் தொடர்ந்து வரணி, மிருசுவில், மீசாலை பகுதிகளிலும் கிளைகள் நிறுவப்படவிருக்கிறது. (க)

புதுக்குடியிருப்பு

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச்சங்க நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்: ஏ. கே. மகாலிங்கம் உப தலைவர்: மு. தர்மலிங்கம் பொருச் செயலாளர்: ச. நாகரத்தினம், உபசெயலாளர்: செ. மெற்றுஸ்மயில், பொருளாளர்: க சரவணபவன் செயற்குழு உறுப்பினர்கள்; தி. அமிர்தலிங்கம், ஊ. செபமாலை, இ. விக்னேஸ்வரன். க. சிதம்பரப்பிள்ளை.

கல்வி, கலாச்சார உப குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## சிறுவர் ஆண்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சிறுவர் இளைஞர் நலநோன்பு நிறுவனம், சர்வதேசசிறுவர் ஆண்டையொட்டி 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கிடையில் பேச்சுப்போட்டி, திருக்குறள் மனனப்போட்டி, பொது அறிவுப்போட்டி, பாட்டுப்போட்டி, கட்டுரைப் போட்டி ஆகிய போட்டிகளை வடமாகாண ரீதியில் நடாத்தவுள்ளது

போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் செப்டம்பர் மாதம் நடாத்தப்படும். இவ்வைபவத்தில், யுனஸ்கோ நிறுவனம், நொவிப் நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (கே-இ)

# ஹிந்திமொழியை திணிக்கக்கூடாது; மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்!

'ஜனதா-எஸ்' காங்கிரஸ் கூட்டரசில் இணைய தீர்மானித்துள்ள

## அ. இ. அ. தி. மு. க.வின் பொதுத்திட்டம் இதுவே

சென்னை, ஆக. 2

- ஹிந்திமொழி பேசாத மாநிலங்களில் அம்மொழியைத் திணிக்கக் கூடாது.
- மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிக்கப்படுவதுடன் அதிக நிதியும் வழங்கப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட இருகோரிக்கைகளும் அடங்கிய பொதுத்திட்டம் ஒன்றின் அடிப்படையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் 'ஜனதா-எஸ்'- காங்கிரஸ் கூட்டரசாங்கத்தின் மந்திரி சபையில் சேர்ந்துகொள்வதென்று முடிவு செய்துள்ளது.

புதிய மத்திய அரசின் கோரிக்கையை அடுத்து நேற்று சென்னையில் கூடிய அ இ அ தி மு கவின் பாராளுமன்றக் குழு இம்முடிவை மேற்கொண்டது.

### நெடுஞ்செழியன் தகவல்

மத்தியில் கூட்டரசாங்கத்துடன் இணைவதற்கான பொதுத்திட்டத்தை வரைவதற்கு 6 உறுப்பினர்கள் கொண்ட கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதென்றும் இக்கமிட்டியினால் வரையப்பட்ட பொதுத்திட்டம் விரைவில் பிரதமரிடம் கையளிக்கப்படுமென்றும் அ. இ. அ. தி. மு. க பொதுச்செயலாளர் திரு ஆர் நெடுஞ்செழியன், பாராளுமன்றக்குழுக் கூட்டத்தின் பின் நிருபர்களிடம் பேசுகையில் கூறினார்.

லோகசபையில் அ இ அ. தி. மு. கவுக்கு 18 ஆசனங்கள் உள்ளன என்பது தெரிந்ததே. (இ)

## தேவராஜ்அர்ஸ் பாராட்டு

புதுடில்லி, ஆக. 2

"ஜனதா-எஸ்" - காங்கிரஸ் கூட்டரசில் இணைந்துகொள்வதென்ற அ இ அ தி மு கவின் முடிவை கர்நாடக முதல்வர் திரு தேவராஜ்அர்ஸ் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

"ஜனதா-எஸ்"-காங்கிரஸ் கூட்டரசுக்கு ஆதரவளிக்காவிடினும் அரசைக் கவிழ்ப்பதற்கு அ இ அ தி மு க எச்சந்தர்ப்பத்திலும் முயலமாட்டாது என்றும் பாராளுமன்றக்குழு மற்றொரு தீர்மானத்தைநிறைவேற்றியது. (இ)

சினிமாக் கொட்டகைகளை

## கண்காணிக்க உத்தரவு!

சென்னை, ஆக. 2

தமிழ்நாட்டிலுள்ள இடத்துக்கிடம் சென்று திரைப்படம் காண்பிக்கும் சினிமாக்கொட்டகைகள் யாவும் சினிமாத்தியேட்டர்களுக்கான சட்டதிட்டங்களை ஒழுங்காகக்கடைப்பிடித்து வருகின்றனவா என்பது குறித்து அடிக்கடிசோதனை நடத்துமாறும்சினிமாத்தியேட்டர்களுக்கான விதிமுறைகளை முறையாக கடைப்பிடிக்கும் தியேட்டர்களுக்கே இனிமேல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமென்றும் அரசின் உத்தரவு தெரிவிக்கின்றது. (இ)

## சீனப்பிரதமர் பாராட்டு

பீக்கிங், ஆக 2

சீனப் பிரதமர் திரு. குவா குவா பெங் இந்தியப் பிரதமர் திரு. சரண்சிங்குக்கு பாராட்டுச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

புதிய பிரதமர் திரு. சரண்சிங்கின் பதவிக்காலத்தில் இந்திய உறவு மேலும் பலப்படுத்தப்படும் என்று திரு. பெங் தமது பாராட்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார். (இ)

## இந்திரா எதிர்ப்பு ஆர்ப்பாட்ட வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

சென்னை, ஆக 2

முன்னாள் தமிழ்நாடு முதல்வர் திரு மு கருணாநிதி மீதும் வேறு 133 பேர் மீதும் இந்திரா எதிர்ப்பு ஆர்ப்பாட்ட வழக்கு விசாரணை மீண்டும் இம்மாதம் 14-ம் திகதிவரை ஒத்திப்போடப்பட்டது.

இவ்வழக்கு விசாரணையை வேறொரு நீதிபதிமுன் விசாரிக்கவேண்டும் என தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து மனுதாக்கல் செய்யப்பட இருப்பதால் வழக்கை ஒத்திப்போடும்படி திரு கருணாநிதியின் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதையடுத்து நீதிபதி விசாரணையை ஒத்திவைத்தார்.

1977-ம் ஆண்டு அக்டோபரில் திருமதி காந்தி தமிழ்நாடு வந்தபோது கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது தொடர்பாக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லாத்தீர்மானம் வந்தபோது

## ஜனதாவைக் காப்பாற்ற தம்மீதான வழக்குகளை வாபஸ் பெறுமாறு இந்திரா பேரம்பேசினாராம்

### பெர்னாண்டஸ் தகவல் — மொரார்ஜி மறுப்பு

புதுடில்லி ஆ 2

இந்திய லோக சபையில் ஜனதா அரசுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது ஜனதா அரசைக்காப்பாற்றுவதற்கு முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியினதும் அவரதுகட்சியினதும் ஆதரவைக்கோருவது பற்றி அப்போது நடைபெற்ற ஒருஜனதா பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக முன்னாள் தொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

### மொரார்ஜி மறுப்பு

திரு பெர்னாண்டஸின் குற்றச்சாட்டு முழுப்பொய் என்றும் பாராளுமன்றக் குழுவுக்கு வெளியே சில உறுப்பினர்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆதரவைக்கோருவது குறித்து தம்மிடம் சமர்ப்பித்தபோது தாம் அதைப் புறக்கணித்துவிட்டதாகவும் முன்னாள் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ளார்.

### இந்திரா பேரம் பேசினாராம்

ஜனதா கட்சியைக் காப்பாற்றுவதற்கு இந்திரா காங்கிரஸ் கட்சியின் ஆதரவைக்கோரியபோது, தம்மீது சுமத்தப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ்பெறுமாறு திருமதி இந்திரா காந்தி ஜனதா கட்சியிடம் பேரம் பேசினார் என முன்னாள் வெளியுறவு அமைச்சர் திரு. வாஜ்பாய் தம்மிடம் கூறியதாகவும் திரு ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இரண்டாவது தடவையாக உறுதியாகக் கூறியுள்ளார். (இ)

## புதிய அமைச்சர் பட்நாயக்-ஜெகஜீவன் சந்திப்பு

புதுடில்லி, ஆக. 2

இந்திய புதிய எஃகு, சுரங்க நிலக்கரி அமைச்சர் திரு. பிஜு பட்நாயக் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் திரு ஜெகஜீவன்ராமைச் சந்தித்து உரையாடினார்.

இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள உபஜனாதிபதிதேர்தல் குறித்தே தாம் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தியதாக திரு. ஜெகஜீவன்ராம் கூறினார்.

பொதுக்கருத்து ஒன்றை அடிப்படையாகக் கொண்டு உபஜனாதிபதியை ஏகமனதாகத் தெரிவுசெய்வது குறித்தே தாம் பேச்சு நடத்தியதாகவும் திரு. ஜெகஜீவன்ராம் கூறினார். (இ)

## தூத்துக்குடி சினிமா உரிமையாளர் கைது!

தூத்துக்குடி, ஆக 2

கவலையீனமாக இருந்து சினிமாக் கொட்டகையில் படம் பார்த்துக் கொண்டிருந்தவர்களின் மரணத்துக்குக் காரணமாக இருந்தவர்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் அண்மையில் தீக்கிரையாகி 102பேரைப் பலிகொண்ட தூத்துக்குடி சினிமாக்கொட்டகையின் உரிமையாளர்கள், ஒப்பரேட்டர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உரிமையாளர்களான சுப்பிரமணியம், ராஜாமணி ஒப்பரேட்டர் அருண்தாஸ் ஆகியோரே கைது செய்யப்பட்டவராவர். (இ)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயப் பரிசளிப்புவிழா எதிர்வரும் 6ந்திகதி திங்கட்கிழமை மாலை வித்தியாலயத்

(5-ம் பக்கம் பார்க்க)


# வைத்திலிங்கம்ஸ்

0 உறுதியானதும்
0 நீடித்து உழைப்பதும்
0 தன்னிகரற்றதுமான

'றிவர்' பிரான்ட்

கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்

பிரதான விநியோகஸ்தர்களும் இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

450, பழைய சோனக தெரு,
கொழும்பு--12
தொலைபேசி: 33143-4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


இந்திரா காங்கிரசின் ஆதரவை

# ஜனதாகட்சி நாடிப்போகும் என்றபேச்சுக்கே இடமில்லை

### பத்திரிகைச் செய்திகளுக்கு சந்திரசேகர் மறுப்பு

புதுடில்லி, ஆக. 2

ஜனதாகட்சி இந்திரா காங்கிரசின் ஆதரவைத் தேடிப் போகும் என்ற பேச்சுக்கே இடமில்லை.

இவ்வாறு ஜனதா கட்சித் தலைவர் திரு சந்திரசேகர் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் ஆதரவளிக்கும் பட்சத்தில் ஜனதா கட்சி அதை ஏற்றுக்கொள்ளத் தயங்காது என்று தாம் லக்னோவில் கூறியதாக வெளிவந்த செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதென்றும் திரு சந்திரசேகர் தெரிவித்தார்.

"இந்திரா காங்கிரஸ் ஜனதாவுக்கு ஆதரவளிக்க முன்வந்தாலென்ன செய்வீர்கள்?" என நிருபர் ஒருவர் கேட்டதற்கு, அது பற்றி இப்போது எதுவும் சொல்ல முடியாது என்றே தாம் கூறியிருந்ததாகவும் திரு சந்திரசேகர் மேலும் கூறினார் (இ)

## விமான விபத்தில் 16 பேர் பலி!

லண்டன், ஆக. 2

பிரிட்டனில் நடைபெற்ற விமானவிபத்தொன்றில் 16 பேர்பலியாகினர்என்று அறிவிக்கப்பட்டது 47 பேருடன் சென்ற இவ்விமானம் வடகடலில் விழுந்தே விபத்துக்குள்ளானதாம். 31பேர்தெய்வாதீனமாக உயிர்தப்பினர். (இ)

**நாகம்ஸ்** [சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
மனிதனும் தெய்வமாகலாம்

**வெஸ்லி**
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எஸ். எஸ். ஆர்.-
ராஜசுலோசனா
சிவகெங்கைச் சீமை

பரிசளிப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திறந்தவெளியரங்கில் நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. இ. மாணிக்கவாசகர் கலந்துகொள்வார். வித்தியாலயப் பிரதிநிதி திரு வி பஞ்சாட்சரம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

சிறப்புரையை கோப்பாய் வட்டாரக்கல்வியதிகாரி திரு ஆ. வ. தம்பராசாவும், பரிசில்களை திருமதி ஞானம்பிகை மாணிக்கவாசகரும் வழங்குவார்கள்.

கர்நாடக இசைவிருந்து, ஆங்கில அபிநயப் பாடல், 'பாதுகை' நாடகம் கதம்ப இசை ஆகிய கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும். [கே-அ]

**ராஜா** [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஈ. வி. சரோஜா நடித்த
கொடுத்து வைத்தவள்
(புதிய பிரதி)

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி: 10-30, 2-30, 6-30, & 9-45
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஔவையார்

**வின்டோ** [யாழ். நகர்]
போன்: 7694 தினசரி 4 காட்சிகள்
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

4th AND FINAL WEEK!
**SHANTHI** JAFFNA Phone: 7642
10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
"Mr. MAJESTYK-" Adults Color.
Dont Miss This Action Packed Movie
8-8-79 "THE ODESSA FILE" Suspense! Color
Coming! "JUGGERNAUT Suspense Thriller

**Sridhar - Jaffna**
LAST FEW DAYS
Daily 5 Shows at: 10-30 a m, 1-30, 4-15, 7-00 & 9-45 p m.
The Day of THE JACKAL (Color)
SUPERB SUSPENSE THRILLER...
"ஜக்கோல்" கலர்

**ராணி** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜமுனா
நிச்சய தாம்பூலம்
(புதிய பிரதி)

**REGAL** NOW SHOWING
(Jaffna) Daily at 2-00 4-30, 7-00p.m. only
ALAIN DELON in
Rocco and his Brothers
(Action—Thrill)
மறு அறிவித்தல்வரை இரவு 9-30 மணிக் காட்சிகள் காண்பிக்கப்படமாட்டாது.

**வின்சர்** [யாழ்ப்பாணம்]
போன்: 466
தினசரி 3 காட்சிகள்
10-30, 2-00, 6-00.
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)
மறு அறிவித்தல் வரை 9-30 மணிக் காட்சிகள் காண்பிக்கப்படமாட்டா.

**மனோகரா** [யாழ். நகர்] 10-30, 2-30, 6-30, 9-45
பத்மினி-ராகினி-சுகுமார்
சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்
[பக்திப்படம்—ஈஸ்மன் கலர்]

# ஜனாதிபதிகமிஷன் விபரங்கள் இன்று வெளியாகும்

(கொழும்பு)

தமிழ்மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றிற்குத் தீர்வு காணும் விதத்தில் நிர்வாகப் பரவலாக்கத்திற்கு வழிகோலும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் கிழக்கு மாகாணம், மலையகம், தெற்கு மாகாணம் ஆகிய பகுதிகளின் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யத்தக்கவகையில் அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கமிஷனில் ஒன்பது உறுப்பினர்கள் இடம்பெறுவர் என்றும் இவர்கள் பற்றிய விபரங்கள் கமிஷன் விசாரித்தறிய வேண்டிய விஷயங்கள் நடைமுறைகள் என்பன பற்றி இன்று வெளிவரும் வர்த்தமானியில் அறிவிக்கப்படும்.

ஓய்வுபெற்ற நீதியரசர் திரு விக்டர் தென்னக்கோன் தலைமையில் நியமிக்கப்படவிருக்கும் இக்கமிஷனில் ஏனைய அங்கத்தவர்களாக கலாநிதி ஜே வில்சன் (உபதலைவர்) ஜனாப் ஏ ஸி எம் அமீர், திரு ஜே ஏ எல் குரே என்பவர்களுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியை பிரதிநிதித்துவம் செய்யும்வகையில் கலாநிதி நீலன் திருச்செல்வமும் நியமிக்கப்படவிருப்பது தெரிந்ததே.

இக்கமிஷனின் செயலாளராக தற்போது கல்விச் சேவையில் பணியாற்றும் சிங்களப்பிரமுகர் ஒருவரும், இணைச்செயலாளராக நிர்வாக சேவையிலீடுபட்டுள்ள ஒரு தமிழரும் நியமிக்கப்படக்கூடும் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இக்கமிஷனின் விசாரணைகளை டிசம்பர் மாதம் 31ம் திகதிக்குள் பூர்த்தியடையும் என்றும், தமிழ்மக்களின் நீண்டகால மனக்குறைகளாக விளங்கும் அதிகாரம் பன்முகப்படுத்தல், காணிப்பங்கீடு, குடியேற்ற நடவடிக்கைகள் போன்ற விடயங்களிலேயே கமிஷன் தனது கவனத்தைச் செலுத்தும் எனவும் தெரிகிறது.

ஜனாதிபதியின் மாவட்ட அமைச்சர் திட்டம், உத்தேச மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பற்றியும், இவ்வமைப்பு முறைகளுக்கு கூடிய அதிகாரங்களுடனான மாற்றங்களை ஏற்படுத்துவதுபற்றியோ, அல்லது இவற்றை உள்ளடக்கிய பாரிய அதிகாரப் பகிர்வுத் திட்டம் உருவாக்குவது பற்றியும் இக்கமிஷன் கவனம் செலுத்தவுள்ளது.

இக்கமிஷன் நியமனங்கள் பற்றி ஆராய்ந்த அமைச்சரவை, கிழக்கு மாகாணம், மலையகம், தென்மாகாணம் ஆகிய பகுதிகளின் மக்களுக்கும் இக்கமிஷனில் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும் என்று முடிவுசெய்துள்ளது. இந்த முடிவிற்கமைய கிழக்கு மாகாண மக்கள் சார்பில் சட்டத்தரணி திரு கே நவரத்தினராஜாவும், தெற்கு மாகாண மக்கள் சார்பில் சட்டத்தரணி ஜனாப் எம் ஆர் தாசீமும் நியமிக்கப்படலாம் என அரசாங்க வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. [கா]

## சுவீப் முடிவுகள்

[கொழும்பு]

பொலனறுவை தோப்பவெல பொது விளையாட்டு மைதானத்தில் நடந்த செவ்வாயன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 732-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:
**09 S 0658**
ரூபா 1,00,000

2-வது பரிசு:
**27 X 0280**
ரூபா 40,000

3-வது பரிசு:
**29 T 0968**
ரூபா 10,000

தலா ரூபா 1,717-50 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகளின் விபரம்:

| | |
|---|---|
| 31 A 0157 | 01 C 0832 |
| 13 C 0133 | 02 D 0447 |
| 16 D 0995 | 32 D 0681 |
| 02 E 0299 | 23 E 0549 |
| 29 F 0922 | 04 G 0950 |
| 13 G 0164 | 16 G 0648 |
| 22 G 0013 | 29 G 0198 |
| 20 H 0395 | 01 J 0717 |
| 03 J 0986 | 04 J 0381 |
| 20 J 0145 | 22 J 0043 |
| 25 J 0650 | 26 J 0649 |
| 30 J 0089 | 30 J 0776 |
| 13 K 0220 | 14 L 0200 |
| 16 L 0398 | 19 L 0318 |
| 22 L 0609 | 04 M 0289 |
| 08 M 0887 | 15 M 0283 |
| 32 M 0911 | 07 N 0861 |
| 24 N 0856 | 28 N 0483 |
| 03 O 0746 | 27 O 0438 |
| 10 P 0605 | 11 P 0068 |
| 11 P 0912 | 14 P 0390 |
| 14 P 0671 | 05 Q 0384 |
| 05 Q 0437 | 09 Q 0540 |
| 09 Q 0813 | 24 Q 0872 |
| 31 Q 0221 | 04 R 0410 |
| 11 R 0397 | 14 R 0869 |
| 15 R 0328 | 18 R 0890 |
| 18 R 0961 | 24 R 0595 |
| 26 R 0819 | 27 R 0811 |
| 29 R 0557 | 30 R 0954 |
| 32 R 0763 | 02 S 0766 |
| 10 S 0402 | 15 S 0093 |
| 15 S 0285 | 15 S 0554 |
| 26 S 0732 | 13 T 0757 |
| 25 T 0363 | 13 U 0387 |
| 14 U 0560 | 22 U 0976 |
| 23 U 0610 | 24 U 0525 |
| 08 V 0112 | 15 V 0768 |
| 16 V 0049 | 18 V 0451 |
| 28 V 0118 | 33 V 0558 |
| 09 W 0540 | 13 W 0769 |
| 04 X 0543 | 08 X 0217 |
| 17 X 0102 | 19 X 0064 |
| 21 X 0352 | 23 X 0975 |
| 25 X 0807 | 26 X 0512 |
| 02 Y 0110 | 02 Y 0804 |
| 10 Y 0762 | 17 Y 0815 |
| 20 Y 0667 | 27 Y 0245 |
| 27 Y 0319 | 31 Y 0153 |
| 08 Z 0126 | 19 Z 0885 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

**றியோ** போன்: 7607
[நகரமண்டபம்]
தினசரி: 10-30, 4-45, 7-00,
MARCOPOLO
(Adventure)

# மிருசுவில் பண்டிதருக்கு பாராட்டுவிழா

[சாவகச்சேரி]

பண்டிதர் பி மு. ஞானப்பிரகாசம், சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டமையை பாராட்டி மிருசுவில் மக்களால் நடாத்தப்படும் பாராட்டுவிழா நாளை சனிக்கிழமை மிருசுவில் றோ. க. த. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

அருட்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகள் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு என். பி. ஜெகநாதனும், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி எம் பி திரு வி என் நவரத்தினமும், விசேஷ விருந்தினராக தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு க. துரைராசாவும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு எஸ் கே திரவியநாயகமும் கலந்து கொள்வார்கள்.

இசைப்புலவர் இ செல்லத்துரைபாராட்டுப்பாபாடுவார். பண்டிதர் பொன் சந்தையினார், திரு எஸ் எஸ் கே வாரசன், திரு க சொக்கலிங்கம், பண்டிதர் செ கைலிங்கம், திரு ஆர் ரி சுப்பிரமணியம் மற்றும் பலர் பாராட்டுரை வழங்குவார்கள்.

## ஈழத்துக் காளமேகம்

"இவர் ஈழத்துக் காளமேகம் இவர் பொழிந்த கவிதைகள் பதினாயிரக் கணக்கானவை. ஆகவே இவருக்கு 'கவிமுகில்' என்ற பட்டத்தைச் சூட்டி மகிழ்வோமாக" என்று கலாநிதி பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை தமது ஆசியுரையில் தெரிவித்துள்ளார்கள்.

மிருசுவில் பண்டிதர் பி மு ஞானப்பிரகாசம் சமாதான நீதிவானாகச் சமீபத்தில் நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்டதைப் பாராட்டு முகமாக நாளை சனிக்கிழமை மிருசுவில் ஆர் ஸி பாடசாலை மண்டபத்தில் எடுக்கப்படும் விழாவுக்கு அனுப்பியுள்ள தமது ஆசியுரையில் மேற்கண்டவாறு பண்டிதமணி தெரிவித்துள்ளார்.

—ஆர். ரி. எஸ்.

# வடபகுதி கொலைச்சம்பவங்களுக்கும் பொலிசாருக்கும் தொடர்புண்டா?

## தெரிவுக்குழுவுக்கு 'லலித்' தலைவர்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்பட்டதன் பின்னர் இடம்பெற்றதாகக் கூறப்படும் சில கொலைச்சம்பவங்களில் பொலிசாருக்கும் தொடர்புண்டா என்பது பற்றி ஆராயவுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வர்த்தக கப்பற்றுறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தலைமை வகிப்பார்.

ஐவர் அடங்கிய இத்தெரிவுக்குழுவில் ஐ தே க சார்பில் அப்புத்தளை எம் பி திரு. லோக்கு பண்டாரவும், மத்திய கொழும்பு எம் பி ஜனாப் ஜாபீர் ஏ காதரும் அங்கம் வகிக்கவேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் பிரதிநிதி ஒருவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பிரதிநிதி ஒருவரும் இத்தெரிவுக்குழுவில் இடம் பெறுவர் என எதிர் பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் சில சம்பவங்களில் பொலிசாருக்குத் தொடர்புண்டு என்று எதிர்க்கட்சித்தலைவர் திரு அ அமிர்தலிங்கம் ஜனாதிபதிக்குச் செய்த புகாரை அடுத்து ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றைநியமித்து இதுகுறித்து விசாரிப்பதாக ஏற்கனவே உறுதியளித்திருந்தார் (கா. இ)

# பொலிஸ் அதிகாரியிடம் கொள்ளை!

[கொழும்பு]

துப்பாக்கி மனிதர் ஒருவர் பொலிஸ் அதிகாரியிடமே கொள்ளையடித்த சம்பவமொன்று எம்பிலிப்பிட்டியாவில் நடந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற போது துப்பாக்கி மனிதனால் மறிக்கப்பட்டு 6000 ரூபா பெறுமதியான நகைகளும் கைக்கடிகாரமும் ரொக்கப் பணமும் கொள்ளையடிக்கப்பட்டன.

எம்பிலிப்பிட்டியா பொலிஸார் சந்தேக நபரை கைது செய்ததுடன் பொருட்களையும் மீட்டனர்.

லக்ஸ்பிறேயை

# விலை கூட்டி விற்றவருக்கு அபராதமும், சிறையும்

(யாழ்ப்பாணம்)

லக்ஸ்பிறே பால் மாவை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க ஐம்பது சதம் கூடுதலாக விற்ற ஒரு வியாபாரிக்கு 250 ரூபா அபராதமும் இரண்டு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாதச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

கோப்பாயிலுள்ள கடையொன்றில் லக்ஸ்பிறே பால் மாவை கூடுதலான விலைக்கு வர்த்தகர் ஒருவர் விற்றபோது விலைக்கட்டுப்பாட்டதிகாரிகளிடம் சிக்கிக்கொண்டார்.

யாழ் விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள் இக்கடைக்கு பத்து ரூபாவைக் கொடுத்து ஒருவரை லக்ஸ்பிறே வாங்க அனுப்பியதாகவும், கடை உரிமையாளர் லக்ஸ்பிறேயின் கட்டுப்பாட்டு விலையான ஆறுரூபா ஐம்பதுசதத்திற்குப் பதிலாக ஏழு ரூபா விலைக்கு லக்ஸ்பிறேயைக் கொடுத்து மிகுதி மூன்று ரூபாவையும் கொடுத்த பொழுது விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் கடைக்குச்சென்று கடை உரிமையாளரைக் கைது செய்தனர்.

யாழ் நீதிமன்றத்தில் வர்த்தகருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்தனர். யாழ் நீதிபதி திரு சி ஈ இராசசிங்கம் விசாரணையின்பின் எதிரிக்கு 250 ரூபா அபராதமும் 2 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத்தண்டனையும் விதித்தார். (கொ)

# இவர்கள் திடீர் ராஜினமா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உபதலைவரும் மற்றும் இயக்குநர் சபை உறுப்பினர்கள் நான்கு பேரும் கூட்டாக இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் தமது பதவியிலிருந்து திடீரென ராஜினமாச் செய்துள்ளனர்.

சங்கத்தின் உபதலைவர் ஆசிரியர் திரு. க. பரமலிங்கம், இயக்குநர்சபை உறுப்பினர்கள் வ. கு. அருளப்பா, மாமடின் செல்லையா, இ. காசிப்பிள்ளை, அ. அதிரியானந்தம் ஆகியோரே இவ்வாறு பதவியிலிருந்து ராஜினமாச் செய்தவர்களாவர். இவர்கள் தங்களது ராஜினமாக் கடிதங்களை மேற்படி சங்கத் தலைவரும், வலி. மேற்கு உதவி அரசாங்க அதிபருமான திரு. எம். சுப்பிரமணியத்திற்கும், யாழ். உதவி கூட்டுறவு ஆக்க ஆணையாளருக்கும் அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

# "கெட்ட நண்பர்களுடன் சிறிதேனும் சேராதீர்"

(யாழ்ப்பாணம்)

"புலியிடத்திலும் கடவுள் இருக்கிறார். ஆனால் புலியைக் கட்டி அணைத்தால், அது எங்களைக் கொன்றுவிடும்" என்று சுவாமி ராமகிருஷ்ணர் கூறியிருக்கிறார். ஆதலால் கெட்ட நடத்தையுடையவர்களுடன் சிறிதேனும் சேரக்கூடாது'

இவ்வாறு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் "ஆத்மீக சன்மார்க்க கல்வி' பற்றி பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமச் செயலாளர் பிர. இரத்தின சபாபதி பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நல்லொழுக்கமுடையவர்களையே நாம் நமது நண்பர்களாக்கிக்கொள்ள வேண்டும். இதுவே எம்மை மிக மேலாக மேல் நிலைக்குக் கொண்டுபோய்விடும். இன்று உலகில் பலர் குறிக்கோள்கள் எதுவுமற்ற வாழ்க்கை வாழுகிறார்கள். மாணவ சமுதாயம் எதிர்கால நம்பிக்கையுடன் ஏதாவது ஒரு குறிக்கோளுடனும் தூய்மையுடனும், பெரும் சிரத்தையுடனும் பொறுமையுடனும் செயலாற்றவும் வாழவும் பழகிக்கொள்ளவேண்டும்." (கா-அ)

# தமிழ் ஊழியர் சிங்களத் தேர்ச்சி

## பண்டிதர் ஜனாதிபதிக்கு தந்தி

(யாழ்ப்பாணம்)

'தமிழ் உத்தியோகத்தர்களின் சிங்களத் தேர்ச்சி குறித்து ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவசரத் தந்தி ஒன்றை ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ளார். அத்தந்தியின் விபரம் வருமாறு:

"புதிய அரசியல் அமைப்பிற்கிசைய தமிழ் உத்தியோகத்தர்களின் சிங்களத் தேர்ச்சி பற்றி ஆக்கப்பட்ட புதிய சுற்றறிக்கை பரிசீலனை செய்யப்படுவதாக எனக்கு கடந்த மாதம் 13ம் திகதி அறிவித்திருந்தீர்கள். இந்தச் சுற்றறிக்கையின் பரிசீலனை எப்பொழுது முடிவடையும் என்பதை அறிவிக்குக.

இந்த விடயத்தில் அளவுக்கு மிஞ்சிய காலதாமதம் பல குடும்பங்களின் துன்பங்களை நீடிக்கிறது துன்பமுறும் குடும்பங்களின் தொகையும் கூடுகிறது.'. (இ)

# வைத்தியர்கள் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் வைத்தியர்கள் மேற்கொண்டுவந்த வேலைநிறுத்தம் நேற்றுப் பிற்பகல் கைவிடப்பட்டது.

பெரியாஸ்பத்திரியின் விபத்துச் சேவைப்பிரிவில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை வைத்து வைத்தியர் ஒருவர் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டதையொட்டியே இந்த வேலைநிறுத்தம் நடைபெற்றுவந்தது.

# திருக்கேதீஸ்வரம் செல்வர்

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறவிருக்கும் கதிர்காம தீர்த்தோற்சவ வைபவத்தில் கலந்துகொள்வதற்காக அடியார்கள் திருக்கூட்டம், நல்லூர் ஆதீனத்திலிருந்து இன்று மாலை பாதயாத்திரையாக திருக்கேதீஸ்வரம் செல்லவுள்ளது.

பாதயாத்திரையாகச் செல்லும் வழியில் இவர்கள் நாயன்மார்கட்டு ஸ்ரீ பேச்சியம்பாள் என அழைக்கப்படும் ராஜராஜேஸ்வரி ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசையில் கலந்துகொள்வர். (செ-கு)

# "திருமுறைப் பண்ணிசையை உலகெலாம் பரப்பவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"திருமுறைகளை நாம் தினந்தோறும் பாராயணம் செய்வதோடு பண்ணோடு ஓதப் பழகிக்கொள்ளவேண்டும்"

இவ்வாறு யாழ். திருமுறை மன்றத்தினர் நடாத்திய சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை விழாவில் திரு சிவா. பஞ்சாட்சரம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "நாடு முவதும் சுந்தரருக்குக் குருபூசை நடந்தபோதிலும் யாழ். திருமுறை மன்றத்தினர் எடுக்கும் இவ்விழா மிகச் சிறந்ததாகும். அவர்கள் ஆற்றி வரும் சேவை போற்றத்தக்கது. நாமெல்லோரும் திருமுறைப்பண்ணிசையை உலகெல்லாம் பரப்ப வழி செய்ய வேண்டும்'' என்றார்.

விழாவில் மன்ற அமைப்பாளர் திரு: சி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் திருமுறைப் பஜனையும் திருத்தொண்டர் தொகையும் ஓதப்பட்டது. (செ-)

## இன்றைய...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வழிபால் சஞ்சலத்துக்கு இடமுண்டு. உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம்.

விருச்சிகம்: துன்பத்தின் சாயல் மனதிலே படியும். பிறிந்துரைகளால் மனது புண்படும். சிலர் உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக்கொள்வார்கள்.

தனுசு: பொருளீட்டும் துறையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். அயலவர்களின் அன்பு உங்களைப் பரவசப்படுத்தும். குடும்ப வாழ்க்கையில் சமரசம் நிலவும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் மதிப்புக் கொடுப்பர்.

மகரம்: [illegible] அதிக] ஆசை வைப்பதன் மூலம் அவதிப்படுவீர்கள். குறுக்கு வழியில் இறங்குவதற்கு எண்ணம் தோன்றலாம். ஆத்திரப்படுவதால் விபரீத விளைவுகள் ஏற்படும். தடைகள் பல உண்டு. அவசர முடிவைத் தவிர்க்கவும்.

கும்பம்: வணிகர்களுக்கு வியாபார விருத்திக்கு இடமுண்டு. புதிய முயற்சிகள் இன்று கைகூடும். செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

மீனம்: வாழ்க்கையில் புதிய நம்பிக்கை உதயமாகும். நீண்டநாள் கோரிக்கை இன்று நிறைவேறலாம். வீட்டில் சுமூகமான சூழ்நிலை தென்படும். உடன் பிறந்தவர் ஒருவரிடமிருந்து உற்சாகமான செய்தியும் கிடைக்கலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# க. பொ. த. (சாதாரணம்) விண்ணப்பத் திகதி பின்போடப்பட்டது

(கொழும்பு)

இந்த வருடம் டிசம்பர் மாதம் க. பொ. த (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் தாக்கல் செய்யும் திகதி பின்போடப்பட்டுள்ளது.

இதன்படி இம்மாதம் (ஆகஸ்ட்) 10ம் திகதிவரை பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை அனுப்பலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சகல தபால் நிலையங்களிலும், உப தபால் நிலையங்களிலும் பரீட்சார்த்திகள் விண்ணப்பத்துக்கான பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திரா பிணையில் விடுதலை

புதுடில்லி, ஆக 2

முன்னாள் இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்திக்கு ஜீப் ஊழல் வழக்கில் இன்று பிணையில் விடுதலை வழங்கப்பட்டது.

1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது பணம் ஏதும் கொடுக்காமல் 139 ஜீப் வண்டிகளைப் பயன்படுத்தியதாக திருமதி இந்திரா காந்தி மீதும் வேறு 25 பேர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வழக்கு விசாரணை இன்று விசேஷ நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது திருமதி காந்தி ஆஜராகியிருந்தார்.

வழக்கு விசாரணையை இம்மாதம் 13ம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி திருமதி காந்தியை பிணையில் விடுதலை செய்தார்.

நீதிமன்றத்துக்கு வெளியில் ஆர்ப்பாட்டம் செய்த இந்திரா ஆதரவாளர்கள் 600 பேர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

# ஓடு பிரித்துக் களவு

(யாழ்ப்பாணம்)

வீட்டுக்காரர் கோவிலுக்குச் சென்ற சமயம் வீட்டில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது.

இளைப்பாறிய விவசாய போதனாசிரியர் சுப்பையா தனிவீரசிங்கத்தின் வீட்டிலேயே இச்சம்பவம் நடந்துள்ளது.

சம்பவதினம் இரவு 7 மணியளவில் இவர் நல்லூர்க் கந்தசாமிகோவிலுக்குச் சென்று வழிபட்டபின் இரவு 9 மணியளவில் திரும்பிவந்தபோது வீட்டில் ஓடு பிரிக்கப்பட்டு சுமார் 900 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டது தெரியவந்தது. (கொ)

## கட்டிட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிளை;

யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், வடபகுதி பாதுகாப்பு ஆலோசகருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி கட்டிடவாரம் ஜனாதிபதியைச் சந்தித்து யாழ்ப்பாணத்தில் நுண்ணலைத் தொடர்பு நிலையத்தைத் துரிதமாக அமைக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். சந்திப்பின்போது யாழ்ப்பாண மக்கள், கொழும்புக்கு தொலைபேசித் தொடர்பு கொள்ள எட்டு மணித்தியாலங்கள் எடுப்பதாகச் சுட்டிக்காட்டியிருந்தார். கட்டிட வேலைகளைத் தனியார் கட்டிட ஒப்பந்தக்காரருக்கு வழங்கினால், வேலைகள் துரிதமாக முடியுமென்றும் ஆலோசனை தெரிவித்தார்.

இம்மாதிரியான நிலையங்கள் துணுக்காய், கிளிநொச்சி அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுச் செயல்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

## பங்கீட்டுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரிசியே வழங்கப்பட்டுவருகின்றன.

புதிய பங்கீட்டுத் திட்டம் நடைமுறைக்கு வரும்வரை இரண்டு ரூத்தல் அரிசியை இலவசமாக பங்கீட்டுப் புத்தகங்கள் வைத்திருப்போர் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாரம் மேலதிகமாக ஒரு ரூத்தல் அரிசி இலவசமாக வழங்கும்படி உத்தரவு வரவில்லையென பங்கீட்டுப்பொருட்களை விநியோகிக்கும் வர்த்தகர்கள் கூறுவதில் எதுவித உண்மையுமில்லை என்றும் அவர் தெரிவித்தார். (செ)

## வாகனப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படும்;

பாடசாலைகள் யாவும் காலை 7-30 மணிக்கு ஆரம்பமாகும்.

புதிய வேலை நேரப்படி போக்குவரத்து சேவைகளை மாற்றியமைக்குமாறு புகையிரதப்பகுதியினருக்கும் இ போ ச பகுதியினருக்கும் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம் எச் முகமட் பணித்துள்ளார்.

12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 8 மணி முதல் பகல் 12 மணிவரை மோட்டார் வாகனங்கள் வீதியில் செல்வது தடை செய்யப்படும்.

ராணுவம்-கடற்படை, விமானப்படை, பொலிஸ்பகுதி ஆகிய துறைகளைச் சேர்ந்த வாகனங்களுக்கு இத்தடையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகின்றது. பஸ்கள், வாடகைக் கார்கள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், பிரேத வண்டிகள், அம்புலன்ஸ் வண்டிகள், தீயணைக்கும் வண்டிகள், லொறிகள் போன்றவற்றுக்கும் விதிவிலக்கு உண்டு.

அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரமே அனுமதியளிக்கப்படும். மோட்டார் போக்குவரத்து ஆணையாளர், அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், பொலிஸ் அதிபர்கள், உதவி பொலிஸ் அதிகாரிகள் தரத்திற்கு குறையாத பொலிஸ் அதிகாரிகள் ஆகியவர்கள் இதுபற்றி ஆராய்ந்து அனுமதி வழங்குவர்.

சுகவீனமடைந்தவர்களை ஏற்றிச் செல்வோர், விமானப் பயணங்களுக்குச் செல்வோர், உயர் தொழில் துறையில் கடமை புரியச் செல்வோர், மதகுருமார் ஆகியோர் அதிக தாமதமின்றி அனுமதியைப் பெறுவர்.

இக்கட்டுப்பாடுகளை மீறும் சாரதிகள்மீது வழக்குத் தொடர்ந்து தண்டிப்பதற்கான சட்டம் தயாரிக்கப்பட்டுவருகிறது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78
The Eelanadu P B No 49. Telegeram: Eelanadu T.Phon: 389.